1969 செப்டம்பர் 13]

E.S.I. Hospital at Singanallur

* *S.N.Q.* 4—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government has decided to postpone the commissioning of the E.S.I. Hospital at Singanallur in Coimbatore District;

(*b*) if so, the reasons therefor;

(*c*) the details of the demands if any of the Coimbatore District Textile Workers Union on the naming of the hospital; and

(*d*) the details of the decision of this Government on their demands?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) ஆம்

(இ) கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் மாநிலக் காப்புறுதி மருத்துவ மனைக்கு வேண்டிய முழு வசதிகள் இன்னும் அமைக்கப்படவில்லை. அம்மருத்துவ மனை எத்தனை படுக்கை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதுபற்றித் தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்துடன் கலந்து முடிவு செய்யப்பட வில்லை.

(உ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கோயம்புத்தூர் மாவட்டப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் மாநிலக் காப்புறுதி மருத்துவமனைக்கு காலஞ்சென்ற தொழிலாளர் தலைவர் திரு. என். ஜி. ராமசாமியின் பெயரை வைக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டது. அத்துடன் பிணியாளர் வரிசைப் பிரிவுகளுக்குப் (wards) பெயரிடுவதென அரசு முடிவு செய்தால், மருத்துவமனையின் பல்வேறு நோயாளிப் பிரிவுகளுக்கு சில தொழிலாளர் தலைவர்களின் பெயர்களை வைக்கவேண்டும் என்றும் சங்கம் கேட்டுக் கொண்டது.

(எ) கோயம்புத்தூர் தொழிலாளர் மாநிலக் காப்புறுதி மருத்துவ மனைக்கு எந்தத் தனிப்பட்டவரதுப் பெயரையும் வைக்கவேண்டியது அவசியமில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது. அவ்வாறே மருத்துவமனையின் நோயாளிகளில் வரிசைப் பிரிவுகளுக்கு எந்த ஒரு தனிப்பட்டவரின் பெயரும் வைக்கப்படமாட்டாது.

DR. H. V. HANDE : The Hon. Minister in his answer has listed two reasons for the postponement. The first reason is that the bed strength was not fixed. Government could have contacted the parties concerned earlier and fixed the bed strength. The second reason is about naming. First the D.M.K. wanted to have the name of 'Anna'. Even that they have sacrificed to satisfy some important sections. When that sort of sacrifice has been made by Government, will the department concerned persuade the workers and have a tripartite conference so that these small things do not stand in the way of giving greater advantage and facilities to workers in whom leaders of workers must be basically interested?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, முதலில் 500 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக இருக்க வேண்டும் என்று ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனே பணத்தை ஒதுக்கி கட்டடம் கட்டினார்கள். கட்டடம் கட்டி முடிந்ததற்குப் பிறகு, 300 படுக்கைகளாகக் குறைக்க வேண்டும் என்று அங்கிருந்து ஒரு தாக்கீது வந்தது. அப்பொழுது நான் அந்த இலாக்காவிற்குப் பொறுப் பேற்றுக் கொண்டிருந்த காரணத்தால், முதலில் ஒத்துக்கொண்டு இப்பொழுது குறைக்கவேண்டும் என்கிறீர்களே என்று ஆட்சேபணைக் குறிப்பை மத்திய சர்க்காருக்கு எழுதி அனுப்பினேன். கட்டடம் கட்டி முடிந்து விட்டது, 500 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாகவே இருக்கவேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு எழுதி அனுப்பினேன். அதற்குப் பிறகு, ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனிடமிருந்து மீண்டும், அதை 244 ஆகக் குறைக்க வேண்டும் என்று உத்தரவு போட்டு அனுப்பினார்கள். அதன்பேரில், முடியாது 300 படுக்கைகள் கொண்டதாகவாவது இருக்கவேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு எழுதியனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

மற்றொரு விவகாரத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள் தெரிவித்தார்கள். அங்கிருக்கும் தொழிலாளர் தலைவர்களைக் கூட்டி வைத்துப் பேசி, இப்படிச் செய்யலாமா என்று நானே முயற்சி செய்து பார்த்தேன். அங்கிருக்கும் மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் பொறுப்போடு பெருமுயற்சி எடுத்துக்கொண்டதன் பேரில், அண்ணா அவர்களின் பெயரை வைக்க முதலில் பெருந்தன்மையாக விட்டுக் கொடுத்து, பிறகு அங்கிருக்கும் சில பேர் பிடிவாதம் காட்டுவதால் அங்கிருக்கும் மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரை, 'சமாதானம் செய்யுங்கள்' என்று முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

திரு. கே. விநாயகம் : இப்படி அங்கிருக்கின்ற தொழிற்சங்கங்களை எல்லாம் கலந்து பேசி, முடிவாக எவருடைய பெயரை அந்த ஆஸ்பத்திரிக்கு வைப்பதாக அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலிலே, மறைந்த அண்ணா அவர்களுடைய பெயரை அந்த மருத்துவ மனைக்கு வைப்பது என்று முடிவு செய்யப்படவில்லை—அறிவிக்கப் பட்டது. அப்படி அறிவிக்கப்பட்டவுடன், அங்கிருக்கின்ற பி. எஸ். கட்சி தொடர்புள்ள தொழிற்சங்கமும், அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி தொடர்புள்ள தொழிற்சங்கமும் அங்கே தியாகி என். ஜி. ராமசாமி அவர்களுடைய பெயரை அந்த மருத்துவ மனைக்கு வைக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

தியாகி என். ஜி. ராமசாமி அவர்களிடத்திலே எங்களுக்கு நிரம்ப மதிப்பு உண்டு. ஆனால், அண்ணா அவர்களுடைய பெயர் அறிவிக்கப்பட்ட பிறகு, தியாகி என். ஜி. ராமசாமி அவர்களுடைய பெயரை வைக்கவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களை அழைத்து நான் பேசினேன். அப்படிப் பேசிய நேரத்தில் ஒரு சமரசமான முடிவுக்கு வர வேண்டும் என்று அவர்

1969 செப்டம்பர் 13]

களிடத்திலே கேட்டு கொண்டேன். "என். ஜி. ராமசாமி பில்டிங்ஸ்" என்று கட்டடத்திற்குப் பெயரும், "அண்ணா மருத்துவ மனை" என்று மருத்துவ மனைக்குப் பெயரும் வைக்கலாம் என்று அவர்களிடத்தில் சொன்னேன். யோசித்துச் சொல்வதாகச் சென்றவர்கள், பிறகு அவர்களாகவே ஒரு கடிதம் மாவட்ட ஆட்சி மன்றத் தலைவருக்குக் கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள்—பி. எஸ். கட்சித் தலைவர் அவர்கள். அதிலே அண்ணா அவர்களுடைய பெயரைப்பற்றி எதுவும் குறிப்பிடாமல், முதலமைச்சர் அவர்களிடத்தில் பேசியதற்கிணங்க தியாகி என். ஜி. ராமசாமி அவர்களுடைய பெயரைக் கட்டிடத்திற்கு வைப்பதற்கு நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம், என். ஜி. ராமசாமி அவர்களுடைய பெயரை வைக்க வேண்டும் என்று ஒத்துக்கொண்டு அவர்கள் கடிதம் கொடுத்திருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு, காங்கிரஸ் சார்புடைய தொழிலாளர்கள், இல்லை, இல்லை, என். ஜி. ராமசாமியினுடைய பெயர்தான் மருத்துவ மனைக்கு இருக்க வேண்டும் என்று கிளர்ச்சியைத் தொடங்கினார்கள். பிறகு, கையெழுத்துப் போட்டுக் கொடுத்த அந்தத் தொழிற்சங்கத்தினரும் அவர்களோடு இணைந்து கொண்டு கிளர்ச்சியைச் சற்று வலுவடையக்கூடிய அளவுக்கு விரிவு படுத்தினார்கள்.

அப்பொழுது கோவை சென்றிருந்த நான், நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டபோது, மருத்துவ மனைக்கு எந்தப் பெயரும் வைக்கப்போவதில்லை என்று அறிவித்தேன். மத்திய சர்க்கார் அமைச்சர் திரு. ஹாதி அவர்கள் எங்களுக்கு எழுதிய கடிதத்தில், "ஒரு மாமேதையினுடைய பெயரைப் பிரச்சினைக்குரிய ஒன்றாக ஆக்கவேண்டாம்; ஆகவே, அண்ணா அவர்களுடைய பெயரை வைப்பதுபற்றி யோசனை செய்யுங்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதன்பிறகு, பெயர் வைப்பதைப் பிரச்சினை ஆக்க வேண்டாம் என்ற எண்ணத்தில் அண்ணா அவர்களுடைய பெயரை வைக்காததோடு வேறு எந்தப் பெயரும் வைக்கப்படப்போவதில்லை என்று அறிவித்தேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அந்த அறிவிப்பைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி அடைந்தார். தகராறு தீர்ந்துவிட்டது என்று என்னிடத்தில் கூறினார்கள்.

ஆனால், அதற்குப் பிறகு இப்பொழுது, என். ஜி. ராமசாமி அவர்கள் பெயரைத்தான் வைக்கவேண்டும் என்கிற அளவுக்கு பலகை தயார் செய்து வைத்துக்கொண்டு ஒரு போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்பொழுதும் நான் கடைசி முறையாக இந்தச் சட்ட மன்றத்தின் மூலமாக அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களையும் தொழிலாளர்களையும் கேட்டுக்கொள்வேன்—என். ஜி. ராமசாமி அவர்களிடத்தில் எங்களுக்கு நீங்காத பற்று உண்டு; அவருடைய தியாகத்தில் எங்களுக்கு அழுத்தமான நம்பிக்கை இருக்கிறது; அதை

மதிக்கிறோம் ; மரியாதை தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆனால், அண்ணா அவர்களுடைய பெயரை அறிவித்த பிறகு இரண்டு பெயர்கள் ஒன்றோடொன்று மோதும் நிலைமை ஏற்பட்டு, வருந்தத்தக்க சூழ்நிலை உருவாகி, இரண்டு பெயர்களும் இல்லை என்று ஆனபிறகு, ஒரு பொதுவான முடிவுக்கு வருவதுதான் சாலப் பொருத்தமாகும். இதற்குமேல் அவர்கள் இப்படிப்பட்ட கிளர்ச்சியில் இறங்குவது நல்லதல்ல. அதைத்தான் நான் இந்த மன்றத்தின் மூலமாக அவர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

Reorganisation of Information Department

* 226 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to streamline the Information Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தகவல் துறையைச் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Agitation against increase in postal rates

* 227 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. Chief Minister be pleased to state the number of arrests made in this State in connection with the agitation against increase in postal rates district-wise?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கோரப்பட்டுள்ள செய்திகளடங்கிய விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.ª

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தக் கிளர்ச்சியில் கைது செய்யப்பட்டவர்கள் மீது ஏதாவது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதா ? இந்தக் கிளர்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்குகொள்ளவில்லை. அதனால் அஞ்சல் கட்டண வீதங்களை உயர்த்துவதை ஒத்துக் கொள்ளுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : காங்கிரசும் பங்கு பெறவில்லை. அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that Congress Government at the Centre has levied this increase in tariff on postal rate? The Congress Party has not taken part in this agitation. Is it not a fact that the D.M.K. Party which was against this kind of increase was silent when this agitation was launched by other anti-Congress parties?

---

a 371-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.